# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் முஸ்லிம் மாணவிகளின் ஈடுபாடு - இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தை மையப்படுத்திய ஆய்வு

**Mazahir, S.M.M.,[1] Imthath, S.,[2] Sumaiya, M.A.,[3] and Safiya, A.H.[4]**

[1]Faculty of Islamic studies and Arabic Language, SEUSL, [2,3 and 4] Department of Arabic Language, FIA, SEUSL

*(mazahirsmm@seu.ac.lk, imthath1994@gmail.com, masumaiya116@gmail.com and safiyasafa96@gmail.com)*

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முஸ்லிம் மாணவிகளை அதிகளவு உள்வாங்குகின்ற பல்கலைகழகமாகக் காணப்படுகிறது.அதிலும் குறிப்பாக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் ஆலிமாக்களை அதிகளவு கொண்ட பீடமாகும். இப்பீடத்தில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளாக உள்ள பீடத்தின் மாணவர் பேரவை, சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் மற்றும் முஸ்லிம் மஜ்லிஸ் என்பவற்றில் முஸ்லிம் மாணவிகளின் ஈடுபாடு தொடர்பாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தினுடைய முஸ்லிம் மாணவிகள் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் ஈடுபாடு குறைவாகக் காட்டுவதை அடையாளப்படுத்துவதையும் அவர்கள் அவற்றில் குறைவாக ஈடுபடுவதற்கான காரணங்களைஇனங்காண்பதையும் நோக்கங்களாகக் கொண்டது. பண்புசார் மற்றும் அளவுசார் ஆய்வு முறைகளைக் கலந்தமந்த இவ்வாய்விற்கு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டு, முதலாம் நிலைத் தரவுகளுக்கு வினாக் கொத்து,நேர்காணல் மற்றும் கலாந்துரையாடல் பயன்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்து மூலமான தொகை ரீதியான தகவல்கள் கணனி மென்பொருள் MS Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு புத்தகங்கள், சஞ்சிகைகள், இணையத்தள கட்டுரைகள். அறிக்கைகள் போன்றன பயன்படுத்தப்பட்டன. மாணவிகள் இவ்வமைப்புகளில் குறைவாக ஈடுபடுவதையும் அவர்கள் அவற்றில் பங்களிப்புச் செய்யாமைக்கு ஆண், பெண் கலப்பு, கற்பதற்கு சவால், பிரபல்யம் (Noted) ஆகுதல், ஆண்களோடு குழுப்படங்கள் எடுக்க வேண்டி ஏற்படல், பரீட்சைக்கு தயாராக நேரமின்மை, பொழுதுபோக்கு நேரங்கள் இல்லாமலாகுதல், துணைவரோடு உரையாட வேண்டிய தேவை, வீட்டாரின் மறுப்பு போன்றவற்றை காரணங்களாகவும் கண்டறியப்பட்டது. இறுதியில் அமைப்புக்களில் மாணவிகளின் அதிகரித்த ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கான பரிந்துரைகளையும் இது வழங்குகின்றது.எதிர்காலத்தில் இவ்விடயத்தில்ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்கள், முஸ்லிம் மாணவிகள்

## ஆய்வுப் பின்னணி

ஒருவர் மனிதனாக வாழ்வதற்கு கல்வியே இன்றியமையாததாகக் காணப்படுகிறது. அதிலும் பல்கலைக்கழகம் என்பது பாடசாலைகளைப் போலல்லாது கல்வியை வழங்கும் இடமாக மட்டுமன்றி ஒரு மாணவன் பல கலைகளிலும் தேர்ச்சி பெறுவதற்கான தளமாகவும் தன்னுடைய திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான களமாகவும் ஆளுமையை விருத்தி செய்கின்ற மையமாகவும் திகழ்கிறது. சமூகத்தின் புத்திஜீவிகள் பல்கலைக்கழகங்களில் இருந்து தான் தோற்றம் பெறுகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் காணப்படுகின்ற பல்கலைக்கழகங்கள் நாட்டின் அபிவிருத்தியிலும் பங்களிப்புச் செய்கின்றன.

அதனடிப்படையில் இலங்கையிலுள்ள பதினைந்து பல்கலைக்கழங்களில் முஸ்லிம் மாணவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரே பல்கலைக்கழகமாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. குறிப்பாக முஸ்லிம் மாணவிகள் அதிகளவு உள்வாங்கப்படுகின்ற பல்வலைக்கழகமாகவும் இதுவே காணப்படுகின்றது.

அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகளுக்கென்று தனித்துவமாக அமைந்துள்ள இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் கல்வி நடவடிக்கைகளில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் குறிப்பிடத்தக்களவு முன்னணியில் திகழ்கின்றது. எனினும் கடந்த காலங்களில் பல்கலைக்கழகத்தின் அங்கீரிக்கப்பட்ட அமைப்புக்களில் முஸ்லிம் பெண் மாணவிகளின் பங்கேற்பானது வீழ்ச்சியடைந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை அறிக்கைகள், தொடர்தேர்ச்சியான அவதானிப்புகள் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இது பீடத்திற்கு மட்டுமன்றி முஸ்லிம் சமூகத்திற்கும் பாரியதொரு இழப்பாகும். இப்பின்னணியே இவ்வாய்விற்கான முக்கிய ஊக்கக் காரணியாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ தகவல்களின்படி இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தில் 75% இற்குமதிகமானவர்கள் மாணவிகளே உள்வாங்கப்படுகிறார்கள். (UGC, 2017) இருந்த போதிலும் மாணவர்கள் அங்கத்துவம் வகிக்கும் இப்பீடத்தின் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் முஸ்லிம் மாணவிகள் வினைத்திறனான ஈடுபாடு காட்டாமை எமது ஆய்வுப் பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கங்கள்**

- அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் முஸ்லிம் மாணவிகளின் ஈடுபாடு குறைவாக இருப்பதை அடையாளப்படுத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் முஸ்லிம் மாணவிகளின் ஈடுபாடு குறைவாக இருப்பதற்கான காரணங்களை கண்டறிதல்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவிகளை மையப்படுத்தி பல்வேறுபட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் முஸ்லிம் மாணவிகளின் ஈடுபாடு தொடர்பான விடயங்களைக் கண்டறிவதற்கான முதல் முயற்சியாகவே இவ்வாய்வு காணப்படுகின்றது.

மேலும் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் இப்பீட முஸ்லிம் மாணவிகளின் பொதுச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கும் அவர்களுடைய ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய வழிவகைகளை முன்வைத்து இப்பீடத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதால் இவ்வாய்வு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்புசார் மற்றும் அளவுசார் முறைகள் சார்ந்ததாக காணப்படுகின்றது.ஆய்வின் முதலாம் நிலைத்தரவுகள், வினாக் கொத்து, நேர்காணல், மற்றும் கலந்துரையாடல் மூலமாகப் பெறப்பட்டுள்ளன. இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தில் கற்கும் மாணவிகளில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 160 மாணவிகளுக்கு வினாக்கொத்துகள் பகிரப்பட்டன. அவற்றில் 126 வினாக்கொத்துக்கள் (79%) மீளக்கிடைக்கப் பெற்றன. பீடத்தின் மாணவர் பேரவை,முஸ்லிம் மஜ்லிஸ் மற்றும் சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் போன்றவற்றின் தலைவர் மற்றும் செயலாளர்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர். அத்துடன் இப்பீடத்திலிருந்து பட்டம் பெற்று வெளியான 3 விரிவுரையாளர்களுடனும் கலந்துரையாடப்பட்டது.

இரண்டாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு புத்தகங்கள்,சஞ்சிகைகள்,இணையத்தள கட்டுரைகள். அறிக்கைகள் போன்றன பயன்படுத்தப்பட்டன. விரிதாள் (Excel Sheet)மூலம் விளக்கப்படங்களும் வரைபடங்களும் தயார்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் வரையறைகள்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தை மாத்திரம் மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதிலும் குறிப்பாக மாணவர்கள் அங்கம் வகிக்கும் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களான பீடத்தின் மாணவப் பேரவை, சமூக ஆய்விற்கான மாணவர் ஆய்வு மன்றம் மற்றும் முஸ்லிம் மஜ்லிஸ் என்பவை இதற்காகத் தெரிவு செய்யப்பட்டன. இவ்வமைப்புக்களில் இவ்வருடத்தில் நிர்வாக பதவிகள் மற்றும் அங்கத்துவம் வகிப்போர் தொடர்பான தகவல்களும் திரட்டப்பட்டன.

**இலக்கிய மீளாய்வு**

முஸ்லிம் பெண்களின் சமூகப் பங்களிப்பு, முஸ்லிம் பெண்களின் கல்வி போன்ற தலைப்புக்களில் பரவலாகக் கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Koushalya Pereraஅவர்களினால் இணையத்தில் வெளியிடப்பட்ட "There Are More Women At Sri Lankan's University – But They Remain Spaces Dominated By Men"என்ற கட்டுரையில் இலங்கை பல்கலைகழகங்களில், அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் பெண்களின் நுழைவு வீதம் அதிகமாக காணப்பட்ட போதும் முக்கிய பதவிகளில் பெண்களுடைய ஈடுபாடு குறைவாக இருப்பதைப் பற்றி தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தின் 4ஆவது சர்வதேச ஆய்வு மாநாட்டில் வெளியிடப்பட்ட MNF. Nisrin, BF. Sifara AH. Rifasஆகியோரால் எழுதப்பட்ட ''த.'.வா துறையில் ஆலிமாக்களின் பங்களிப்பு'': இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு என்ற ஆய்வுக் கட்டுரையில் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளிடம் த.'.வா செய்யக் கூடிய திறமைகள் காணப்படுகின்ற போதும் த.'.வாவிற்கான அவர்களின் பங்களிப்பு குறைவாக இருப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழகத்தின் 6ஆவது ஆய்வு மாநாட்டில் SL. Sihana, MJF. Jasna ஆகியோரால் வெளியிடப்பட்ட ''விளையாட்டு நிகழ்வுகளும் முஸ்லிம் மாணவிகள் பங்கேற்பதில் உளவியல் சவால்களும்'' என்ற தலைப்பினூடாக விளையாட்டுத் துறையில் குறிப்பாக முஸ்லிம் மாணவிகள் ஈடுபாடு காட்டாமையை மையப்படுத்தி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இவைதான் எமது ஆய்வுத் தலைப்பிற்கு மிக நெருக்கமான இலக்கிய மீளாய்வுகளாக கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான தலைப்புக்களில் ஆய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் முஸ்லிம் மாணவிகளின் ஈடுபாடு என்ற ஆய்வுத் தலைப்பில் இதுவரை எந்த ஓர் ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே, இந்த ஆய்வு இடைவெளியை கருத்திற் கொண்டு, அதைப் பூரணப்படுத்துவதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**கலந்துரையாடலும் பிரதான கண்டறிதல்களும்**

இன்றைய நவீன உலகம் பெண்களுக்கு வழங்கியதை விட உண்மையான சுதந்திரத்தையும் அந்தஸ்தையும் 1400 வருடங்களுக்கு முன்னரே இஸ்லாம் அவர்களுக்குக் கொடுத்து விட்டது. பெண் விடயத்தில் ஒரு சாரார் எதையெல்லாம் வளர்ச்சி, முன்னேற்றம், அறிவுடைமை, கண்ணியம், உயர்வு என்று கருதுகின்றார்களோ அவற்றை நேர் எதிராக மற்றுமொரு சாரார் வீழ்ச்சி, பின்னடைவு, அறியாமை, அவமானம், இழிவு என்று கருதுகின்றார்கள். என்றாலும் இஸ்லாம் பெண்கள் விடயத்தில் நடுநிலைத் தன்மையை வழங்கியுள்ளது.

பெண்கள் பதவிகளை வகிப்பது தொடர்பாக அல்குர்ஆனை ஆராய்ந்து பார்த்தால் அதற்குத் தடைகள் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக சமூக பொறுப்புக்கள் பலவற்றில் ஆண்களும் பெண்களும் இணைந்து பங்கெடுப்பார்கள் என்ற கருத்தையே அல்குர்ஆனில் காணமுடியுமாக இருக்கின்றது.

**''விசுவாசம் கொண்ட ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் ஆதரவாளர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள் நன்மையை ஏவுகின்றார்கள் தீமையைத் தடுக்கின்றார்கள். மேலும்,**


**தொழுகையை நிலைநாட்டி ஸகாத்தையும் கொடுக்கின்றார்கள். மேலும், அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்படிகின்றார்கள். அத்தகையோர் மீது அல்லாஹ்வின் கருணை பொழிந்து கொண்டிருக்கும். திண்ணமாக அல்லாஹ் மிகைத்தோனாகவும் நுண்ணறிவாளனாவும் இருக்கிறான்."**(அல்குர்ஆன் 9:71,72)

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மதீனாவின் சந்தைக் கண்காணிப்பாளராக ஸிபா பின்த் அப்தில்லாஹ் என்ற பெண்ணை நியமித்தார்கள் என்பது பெண்கள் பதவிகளை வகிப்பதற்கான ஓர் எடுத்துக்காட்டாகும். (ஹஜ்ஜுல் அக்பர், 2013)

இலங்கையில் ஆண்களை விட பெண்கள் கல்வித் துறையில் முன்னணியில் இருக்கின்றார்கள். இதுவே இன்றைய கால நவீன வளர்ச்சிப் போக்காக காணப்படுகின்றது. 2015இல் உயர்கல்வி நிறுவனங்களில் 60% மான நுழைவு பெண்களுடையதாகும். மேலும் பட்டதாரி மாணவர்களில் 68.5% மானோர் பெண்களாவர். (கௌசல்யா பெரேரா, 2017)

முஸ்லிம் மாணவிகளைப் பெரும்பான்மையாகக் கொண்டமைந்த இப்பல்கலைக்கழகத்தில்,இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் கல்வி நோக்கத்தை மட்டும் கருத்திற் கொள்ளாது ஆளுமை, திறன்விருத்தி, சீரிய சிந்தனை என்பவற்றை மாணவர்களுக்கு வழங்குவதில் கரிசனை காட்டுகின்றது. அந்த அடிப்படையில் பீடத்திலுள்ள மாணவர் ஆய்வு மன்றம், பீடத்தின் மாணவப் பேரவை, முஸ்லிம் மஜ்லிஸ் போன்ற அமைப்புகள் மாணவர்களுக்கு குறிப்பாக பீடத்தின் பெரும்பான்மையாக இருக்கும் மாணவிகளுக்கு சிறந்த வாய்ப்பாக அமைகிறது.


இப்பீடத்தில் 75% மானோர் மாணவிகளாகவே காணப்படுகின்றனர். இருந்த போதும் இவ்வமைப்புக்களின் நிர்வாக பதவிகளில் மாணவிகளின் வகிபாகம் பீடத்தின் மொத்த மாணவிகளை பிரதிநிதிப்படுத்துவதாக இல்லை. அதாவது சமூகவியல் ஆய்விற்கான மாணவர் ஆய்வு மன்றத்தில் 7 நிர்வாகப்பதவிகள் காணப்படுகின்றன. அதில் 43% மானோர் மட்டுமே மாணவிகளாவர். மேலும் 9 முக்கிய பதவிகளைக் கொண்ட முஸ்லிம் மஜ்லிஸில் 33% மானோர் மாணவிகளாவர். மற்றும் பீடத்தின் மானவப் பேரவையில் 10 முக்கிய பதவிகளில் 40% மானோர் மாணவிகளாவர் என்பதை வரைபடம் 1 எடுத்துக்காட்டுகிறது.இந்த அடிப்படையில் நோக்கும் போது ஒவ்வொரு அமைப்பினதும் நிர்வாக பதவிகளில் மாணவிகளின் வகிபாகமானது 50% கூட அடையவில்லை என்பது தெளிவாகின்றது.




வரைபடம் 1
(மூலம்: வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தகவல்- 2018)

மேலும் அமைப்புக்களில் அங்கத்துவம் வகிக்கும் மாணவிகள் அமைப்புக்களின் செயற்பாடுகளில் வினைத்திறனான பங்களிப்பு வழங்குவதில்லை என்பதை எமது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவிகளில் 80% மானோர் ஏற்றுக்கொள்கின்றனர்.


மேலும் எமது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவிகளின் 37 பேர் (29%) தமது பாடசாலைக் காலங்களிலே அமைப்புக்களில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களில் 41% மானோர் பல்கலைக்கழக நுழைவிற்கு பின்பு அமைப்புக்களில் அங்கத்துவம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது பல்கலைக்கழக பிரவேசத்திற்கு முற்பட்ட காலங்களில் அமைப்புக்களில் இணைந்து செயலாற்றுவதில் இவர்கள் காட்டிய ஆர்வம், பல்கலைக்கழக நுழைவிற்குப் பின்னர் அரிதாகிச் சென்றுள்ளமை நோக்கத்தக்கது. இதனை வரைபடம் 2 தெளிவுபடுத்துகின்றது.




வரைபடம் 2

(மூலம்: வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தகவல்- 2018)


மேலும் 89 பேர்(71%)தமது பாடசாலைக் காலங்களில் எவ்வித அமைப்புக்களிலும் அங்கத்துவம் வகிக்கவில்லை. என்றாலும் பல்கலைக்கழகத்திலுள்ள அமைப்புக்களில் ஈடுபட்டு தம்முடைய அறிவு, ஆற்றல், திறன்கள், இயலுமைகள் என்பவற்றை வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்ட போதும் அதில் 63% மானோர் இவ்வாய்ப்புக்களை பயன்படுத்தாமல் உள்ளனர் என்பது கண்டறியப்பட்டது. பார்க்க: வரைபடம் 3.




வரைபடம் 03

(மூலம்: வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தகவல்- 2018)

இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் ஈடுபடுவது தொடர்பாக மாணவிகள் கரிசனையற்றுக் காணப்படுவதற்கு பல காரணங்கள் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டன. (வரைபடம் 04)




வரைபடம் 04

(மூலம்: வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தகவல்- 2018)

வினாக்கொத்துக்களை வழங்கியதன் அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகளின் பிரதிபலிப்பாகவே மேற்காட்டப்பட்ட வரைபடம் காணப்படுகின்றது. அந்த அடிப்படையில் பொதுவாகவே முஸ்லிம் மாணவிகளில் அதிகமானோர் ஆண் மாணவர்களோடு இணைந்து செயற்படுவதை விரும்புவதில்லை. மேலும் அமைப்புக்களில் மாணவ மாணவிகள் இணைந்து செயலாற்றுவது மார்க்கத்திற்கு முரணாண செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்லலாம் என்பதைக் கருத்திற் கொண்டு அவ்வாறு ஒன்றாக வேலைகளில் ஈடுபட வேண்டி ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாணவிகள் தாமாகவே அதிலிருந்து பின்வாங்கிக் கொள்கின்றனர். மேலுள்ள வரைபின்படி (வரைபடம் 04) 74% மானோர் அமைப்புக்களில் ஈடுபாடு காட்டாமைக்கு ஆண் மாணவர்களோடு இணைந்து செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுவது ஒரு காரணம் என்பதில் உடன்படுகின்றனர்.

இன்னும் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் முஸ்லிம் மாணவிகளின் அதிகரித்த ஈடுபாடு கற்றல் நடவடிக்கைகளுக்கு சவாலாக அமைகிறது என்ற கூற்றை 63%மாணவிகள் ஏற்றுக்கொள்கின்றனர். இதனூடாக மாணவிகள் குறைந்தளவு ஈடுபாடு காட்டுவதற்கு அமைப்புக்களின் வேலைகளில் ஈடுபடுவதால் விரிவுரைகளுக்கு நேரத்திற்கு சமூகமளிக்க முடியாமை, விரிவுரையாளர்களால் கொடுக்கப்படும் கல்விசார் செயற்பாடுகள் மற்றும் சுயகற்றலை மேற்கொள்ள முடியாமை போன்ற தடைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அமைப்புக்களில் முஸ்லிம் மாணவிகள் ஈடுபாடு குறிப்பிடத்தக்களவு காணப்படாமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட மாணவிகளில் 60% மானோர், அமைப்புக்களில் முன்னணியில் செயலாற்றுவதினூடாக விரிவுரையாளர்கள், பீடத்தில் உள்ள ஆண் மாணவர்களிடத்தில் தாம் கவனஈர்ப்புக்குட்பட (Noted) வேண்டி ஏற்படும் எனத் தெரிவிக்கின்றனர். பீடத்தில் இருக்கின்ற அமைப்புக்களில் ஆர்வத்தோடு செயற்படுகின்ற போது பீடத்தில் இருக்கின்ற அனைவருக்கும் அறியப்பட்ட நபராக அவள் மாறக்கூடும். இதனால் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுவதனால் திறமைகள் இருந்த போதும் மாணவிகள் அமைப்புக்களில் உற்சாகத்தோடு செயற்படுவதில்லை என்பது தெளிவாகிறது.

ஆண் மாணவர்களோடு இணைந்து புகைப்படம் எடுப்பதை மாணவிகள் விரும்புவதில்லை. எனினும் அமைப்புக்களில் முக்கிய பதவி வகிப்பதினூடாக ஆண் மாணவர்களோடு இணைந்து குழுப் புகைப்படங்கள் எடுக்க வேண்டி ஏற்படும் என்பதனால் 50% மான மாணவிகள் அமைப்புக்களில் இணைய விரும்பவில்லை. இதனூடாக ஆண்களோடு இணைந்து புகைப்படம் எடுக்க வேண்டி வரும் என்பதனாலேயே இவ் 50% மாணவிகள் அமைப்புக்களில் முக்கிய பதவிகள் வகிப்பதிலிருந்தும் பின்வாங்குகின்றனர் என்பது இனங்காணப்பட்டது.

அமைப்புக்களில் அதிக ஈடுபாட்டோடு மாணவிகள் செயற்படும் தருணத்தில் பரீட்சைகளுக்குத் தயாராகுவது கடினம் என்ற கூற்றோடு 44%மான மாணவிகள் உடன்படுகின்றனர். அதாவது பரீட்சை நெருங்குகின்ற காலங்களில் மற்றும் பரீட்சைக் காலங்களில் கூட அமைப்புக்களில் திடீர் வேலைகள் ஏற்படுவதால் பரீட்சைகளில் கவனம் செலுத்தி, உயர்ந்த பெறுபேறுகளைப் பெற முடியாமல் போகும் என அவர்கள் எண்ணுகின்றனர்.

அமைப்புக்களில் மாணவிகள் முன்னின்று செயற்படுவதனால் அவர்களுடைய பொழுதுபோக்கு நேரங்கள் இல்லாமல் ஆகிவிடும் என்ற கூற்றை 41% மானோர் ஏற்றுக்கொள்கின்றனர்.

29% மான விடுதி மாணவிகளின் கருத்துப்படி நிச்சயிக்கப்பட்டவர் அல்லது கணவரை விட்டு பிரிந்து இருப்பதால் அடிக்கடி அவரோடு தொடர்பு கொள்ள வேண்டிய தேவை இருப்பதாகவும் அதனால் விரிவுரை முடிந்த கையோடு தாம் விடுதி அறைகளுக்கு திரும்பி விடுவதாகவும் தெரிவித்தனர். அமைப்புக்களில் ஊக்கத்தோடு ஈடுபடாமைக்கு குடும்பத்தினர் விரும்பாமையே காரணம் என 19% மாணவிகள் கூறுகின்றனர்.

இருப்பினும் இதற்கு மேலதிகமாக நேர்காணல், கலந்துரையாடல் போன்றவற்றின் மூலம் அமைப்புக்களில் செயற்பட விருப்பமின்மை,மாணவர்களுக்கு முன் வந்து பேசுவதற்கும், மேடைப் பேச்சுகளுக்கும் உள்ள பயம்,அதிகமான ஓய்வை விரும்புவதும் சோம்பல் தன்மையும்,ஆண்களுக்கு முன் நிகழ்ச்சிகளை நடாத்த, முன்னணியில் செயற்பட வெட்க உணர்வு,அமைப்புக்கள் தொடர்பாக மற்றும் அதில் ஈடுபடுவதால் கிடைக்கும் பயன்கள் தொடர்பாக சரியான வழிகாட்டல் இன்மை போன்ற குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய சில காரணங்கள் தெரிய வந்தன.

இவ்வாறு பல்கலைக்கழக மாணவிகள் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் ஈடுபாடு காட்டாமைக்கு பல பின்னணிக் காரணங்கள் இருக்கின்றமை அறியக் கிடைத்தது. இவ்வாறான சிறிய காரணங்களால் மாணவிகள் அமைப்புக்களில் ஈடுபடுவதை கைவிட்டு விடுவதென்பது பொறுத்தமான விடயமன்று. இதனால் சமூகத்திற்கும் நாளைய தலைமுறையினருக்கும் சென்றடைய வேண்டிய எத்தனையோ தலைசிறந்த ஆளுமைகள் உருவாவது தடைப்படுகின்றது.

எமது ஆயவுக்குட்படுத்தப்பட்ட மாணவிகளில் 16% மானோர் தத்தமது வீடுகளிலிருந்தே பல்கலைக்கழகத்திற்கு சமூகமளிக்கின்றனர். ஆகவே,இவர்கள் அமைப்புக்களில் ஈடுபடும் போது போக்குவரத்துப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அதாவது மாலை நேரத்தில் வீடு திரும்ப இருப்பதால் அமைப்புக்களில் இணைந்து செயலாற்றுவது மற்றும் மாலை நேரங்களிலும் வார இறுதி நாட்களிலும் நடாத்தப்படும் நிகழ்ச்சிகள், அமைப்புக்களின் கூட்டங்கள் என்பவற்றில் கலந்து கொள்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

**முடிவுரை**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட மாணவிகளை மையமாகக் கொண்ட இவ்வாய்வின் மூலம் இப்பீட மாணவிகளில் அதிகமானோர் பீடத்தின் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களில் ஈடுபாடு காட்டாமையை அவதானிக்க முடிகிறது. இந்நிலைப்பாடு அவர்களுக்கும் சமூகத்திற்கும் நன்மையாக அமைய மாட்டாது.

எமது பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களைப் போலவே இப்பீடத்திலும் மாணவர்கள் தங்களை வளத்துக் கொள்வதற்காக தரமான விரிவுரையாளர்கள், சாளரம் எனும் சுவர் சஞ்சிகை, பீடத்தின் நூலகம், சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம், பீடத்தின் மாணவப் பேரவை, முஸ்லிம் மஜ்லிஸ் போன்றன காணப்படுகின்றன. இருந்த போதிலும் மாணவிகள் பாடவிதானத்திற்கு மேற்பட்ட செயற்பாடுகளைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களை சரிவரப் பயன்படுத்துவதில்லை. இவ்வாறு மாணவிகள் அமைப்புகளுக்கு பங்களிப்பு செய்யாமைக்கு ஆண், பெண் கலப்பு, கற்பதற்கு சவால், பிரபல்யம் (Noted) ஆகுதல், ஆண்களோடு குழுப்படங்கள் எடுக்க வேண்டி ஏற்படல், பரீட்சைக்கு தயாராக நேரமின்மை, பொழுதுபோக்கு நேரங்கள் இல்லாமலாகுதல், துணைவரோடு உறையாட வேண்டிய தேவை, வீட்டாரின் மறுப்பு போன்றன அடிப்படைக் காரணங்களாக இருக்கின்றமையைக் கண்டறிய முடிந்தது.

**பரிந்துரைகள்**

மாணவிகளின் இந்தப் பின்னடைவை நீக்குவதற்குப் பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

- இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பெண்களுக்கு இருக்கின்ற கண்ணியத்தையும் பல்துறைசார் கலைகளில் இறைதூதர் காலத்திலிருந்து இன்று வரை முஸ்லிம் பெண்கள் ஈடுபட்டுள்ளதையும் தெளிவுபடுத்தல்.
- இஸ்லாமிய ஷரீஆ வரையறைகளுடன் ஆண்,பெண் என்ற இருபாலாரும் பொது இலக்குகளை அடைவதற்காக ஒன்றிணைந்து செயற்படுவதை இஸ்லாம் மறுக்கவில்லை. மாறாக நபியவர்களுடைய சமூகத்திலும் யுத்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் திருமணங்கள் என்பவற்றில் ஆண்களும், பெண்களும் ஒன்றிணைந்து செயற்பட்டு இருப்பதை காணமுடியும் என்பதை மாணவிகள் மத்தியில் உறுதியாக எடுத்துரைத்தல்.
- அறபுக் கலாசாலை ஒன்று கூடல்கள், பிரதேசவாரியான ஒன்று கூடல்கள், அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்கள் வாரியான கூட்டங்கள் என்பவற்றில் முஸ்லிம் மாணவிகள் அமைப்புக்களில் அங்கத்துவம் வகிப்பதன் முக்கியத்துவத்தையும் அதனால் ஏற்படுகின்ற அனுகூலங்களையும் உள்ளடக்கிய விழிப்புணர்வை வழங்கல்.
- ஆரம்பத்தில் முஸ்லிம் மாணவிகளுக்கென்று பிரத்தியேகமான கலை நிகழ்ச்சிகளை நடாத்துவதும் பின்பு அமைப்புக்களில் பொது நிகழ்ச்சிகளில் அவர்களை உள்வாங்குவதினூடாக மேடைப்பயம், கூச்சஉணர்வு என்பவற்றை இல்லாமல் ஆக்குதல்.
- பீடத்தின் மொத்த மாணவிகளின் விகிதத்திற்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு அமைப்பினிலும் மாணவிகளுக்கான சட்டரீதியான ஒதுக்கீடுகளை பெற்றுக் கொடுத்தல்

**உசாத்துணைகள்**


- அல்குர்ஆன்
- கௌசல்யா பெரேரா (2017). “There are more Women at Sri Lankan’s Universities – but they Remain Spaces Dominated by Men”, (online) Retrieved from: http://www.opendemocracy.net October, 1st 2018
- சிஹானா, எஸ். எல், மற்றும் ஜெஸ்னா, எம். ஜெ. எம், (2017). விளையாட்டு நிகழ்வுகளும் முஸ்லிம் மாணவிகள் பங்கேற்பதில் உளவியல் சவால்களும், Proceedings of Sixth International Symposium -2016: South Eastern University of Sri Lanka , Ouvil. (881-886)
- மஸாஹிர், எஸ். எம். எம். (2017). “பல்கலைக்கழக அனுமதி பெற்றும் அதனை உதாசீனம் செய்கின்றனர்”, (online) Retrieved from: http://www.vidivelli.lk October14th 2018)
- நிஸ்ரின், எம். என். எப்.,சிபாரா, பி. எம். மற்றும் றிபாஸ், ஏ. எச். (2017). த∴வா துறையில் ஆலிமாக்களின் பங்களிப்பு: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு,Proceedings Fourth International Symposium -2017: Faculty of Islamic Studies and Arabic Language , South Eastern University of Sri Lanka , Ouvil. (185 – 198)
- ஹஜ்ஜுல் அக்பர், (2013). பெண் நீதமும் நிதர்சனமும், கொழும்பு: அல்ஹஸனாத் வெளியீட்டகம்.
- Reynolds, Peggy (2012). “Where are the women in Universities?” (online) Retrieved from: http://amp.thegurardian.com October14th 2018
- University Grants Commission (UGC), (2017). Sri Lanka University Statistics 2017, Colombo: University Grants Commission.

**நேர்காணல்:**

- றஸ்லான், தலைவர், முஸ்லிம் மஜ்லிஸ் (10.10.2018)
- நபீர், எஸ்.எல்.எம், இணைப்பாளர், முஸ்லிம் மஜ்லிஸ் (10.10.2018)
- அனாப் எம்.எம், தலைவர், மாணவப் பேரவை (07.10.2018)
- ஸல்மான், செயலாளர், மாணவப் பேரவை (07.10.2018)
- நபீர், எஸ்.எல்.எம், தலைவர், சமூக ஆய்விற்கான மாணவர் ஆய்வு மன்றம் (08.10.2018)
- அஸான், ஏ.பி.எம், செயலாளர். சமூக ஆய்விற்கான மாணவர் ஆய்வு மன்றம் (08.10.2018)

**கலந்துரையாடல்:**

- இல்மா, எம்.எஸ்.எம்.,தற்காலிக விரிவுரையாளர், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் (07.10.2018)
- ஸபீர் ஏ.எம்., தற்காலிக விரிவுரையாளர், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் (10.10.2018)
- ஹுதைபா, எம்.எப்., தற்காலிக விரிவுரையாளர், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் (07.10.2018)